# விமுக்தா கூட்டமைப்பு



## ஆண்டறிக்கை 2017-18










# விமுக்தா கூட்டமைப்பு

## ஆண்டு அறிக்கை

## 2017 - 2018

5/321, VOC நகர், சோமையம்பாளையம் ரோடு
கணுவாய், கோயமுத்தூர் - 641 108.
போன் : 0422 - 2401747
E-mail: vimukthacbe@gmail.com
Web: www.vimuktha.org

# முகவுரை



என்.எம்.சி.டி. சேவை நிறுவனத்தின் மகளிர் மேம்பாடு செயல்பாடுகளில் கருவாக விளங்கி தற்போது ஒரு தலைசிறந்த சமுதாயம் சார்ந்த அமைப்பாக செயல்பட்டு கொண்டிருக்கும் விமுக்தா கூட்டமைப்பிற்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

விமுக்தா கூட்டமைப்பு நடப்பு அறிக்கை ஆண்டில் தமது 1,412 உறுப்பினர்களுக்கு வருவாய்பெருக்கும் திட்டம், மருத்துவச் செலவு, கல்விச்செலவு அடகு நகை மீட்டல், வீடு பழுது பார்த்தல் ஆகிய காரணங்களுக்காக ரூ 30,10,000 வழங்கியுள்ளது மேலும் 504 குழு உறுப்பினர்களுக்கு ரூ 50,400 மதீப்பீட்டிற்கு காப்பீடு அளித்துள்ளது.

அதிக மதிப்பெண் பெற்ற குழந்தைகளுக்கு பரிசு வழங்குதல் நலிவுற்ற குடும்பங்களை சார்ந்த குழந்தைகளுக்கு நன்கொடையாளர்கள் மூலம் கல்வி ஆதரவு ஆகிய பணிகளை தொடர்ந்து ஆற்றி வருகிறது.

புகையிலை ஒழிப்பு விழிப்புணர்வு, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, சுகாதார விழிப்புணர்வு, டெங்கு விழிப்புணர்வு, தாய் சேய் நல விழிப்புணர்வு, காச நோய் தடுப்பு விழிப்புணர்வு சமுதாய சுகாதார பணியாளர்கள் பயிற்சிகள், பொது மருத்துவ முகாம்கள், இலவச கண் சிகிச்சை முகாம்கள் ஆகியவற்றை பணியாற்றும் பகுதிகளில் சிறப்பாக நடத்தி வருகிறது.

ஆட்சியர் அலுவலகம் மற்றும் ஊராட்சி மன்றங்களின் நடவடிக்கைகளில் பங்கேற்று மக்களின் குறைகளுக்கும் பிரச்சனைகளுக்கும் தீர்வு காண விமுக்தா கூட்டமைப்பு முயற்சிகள் மேற்கொண்டுவருகிறது இதன்மூலம் ஏராளமான முதியோர்களுக்கு ஓய்வூதியத்தொகையும் பல விதவைகளுக்கு அரசின் உதவித்தொகையையும் பெற்றுத்தந்திருக்கிறது வங்கிகளின் உதவியுடன் கல்விக்கடன் வசதி, வீட்டுக்கடன் வசதி ஆகியவை வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மக்களுக்கு இலகுவாகக் கிடைக்கச் செய்யவும் விமுக்தா நல்லமுறையில் பணியாற்றி வருகிறது. இவ்வாறு பல்வேறு களங்களில் அர்பணிப்புடன் பணியாற்றும் விமுக்தா கூட்டமைப்பை மனதாரப் பாராட்டுகிறேன்.

விமுக்தாவின் செயல்பாடுகள் மேலும் மேலும் சிறக்க எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு,

**ஏ.எஸ்.சங்கர நாராயணன்**
நிறுவனர், விமுக்தா கூட்டமைப்பு.

# சமுதாய சுகாதார பணியாளர்கள் பயிற்சி

ஜெர்மனியில் உள்ள போரிங்கர் நிறுவனம் இரண்டு ஆண்டு சமூக நல விழிப்புணர்வு குறித்த பயிற்சியை கார்ல் கியூபல் கல்வி நிறுவனத்தின் மேற்பார்வையில் தொடங்கியது. விமுக்தா கூட்டமைப்பில் உள்ள 10 உறுப்பினர்கள் இப்பயிற்சிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



முதல் பயிற்சி ஏப்ரல் 4-ம் தேதி ஊட்டச்சத்து குறித்து வழங்கப்பட்டது. இதில் ஊட்டச்சத்தின் அவசியம், தரம், அளவு, சுத்தம், குறித்து பயிற்சி அளித்தனர்.

தாய்மையின் 1000 பொன்னான நாட்களில் பெண்கள் ஊட்டச்சத்து உணவு வகைகளை எவ்வாறு உட்கொள்ள வேண்டும் என்பது பற்றி விளக்கமளிக்கப்பட்டது.

மன நோய் குறித்த பயிற்சி ஜூலை 12-ம் தேதி வழங்கப்பட்டது அதில் மனச்சோர்வு, மன எழுச்சி, சந்தேகம், மனச்சிதைவு, எண்ண சுழற்சி, மன வளர்ச்சி குன்றுதல், மனநலம் காப்பதில் பொது மக்களின் பங்கு குறித்து விளக்கிக் கூறப்பட்டது, தூக்கமின்மை, பசியின்மை, கவலையுடன் காணப்படுதல், உற்சாகமின்றி தனிமையில் இருத்தல் எந்த ஒரு செயலிலும் ஆர்வமின்றி இருத்தல், அடிக்கடி அழுதல், தன்னம்பிக்கை இல்லாமல் இருப்பது தற்கொலை எண்ணம், தற்கொலை முயற்சி, தாழ்வு மனப்பான்மை, வேண்டாத எண்ணங்கள் படபடப்பு எடைகுறைதல், கை, கால், குடைச்சல், தன்னிலைக்கு மீறிய அசாதாரண மகிழ்ச்சி, அதிக கோபம், தன்னால் முடியும் என அதிக நம்பிக்கையுடன் செயல்படுவது, போன்ற அறிகுறிகள் இருந்தால் மன நோயால் பாதிக்கப்பட்டவர்கள் என்பதை தெரிந்து கொள்ளலாம் என்று விளக்கமளிக்கப்பட்டது.

நோய் தொற்று பற்றிய பயிற்சி செப்-26ம் தேதி வழங்கப்பட்டது. இதை ஒரு மனிதனுக்கும் அவனுள் ஏற்படும் நுண்ணுயிருக்கும் ஏற்படும் ஒருவிதமான போர் நோய் தொற்று ஆகும். இந்நோய் தொற்றானது காற்று, சுகாதாரமற்ற கழிப்பிடம், திறந்தவெளியில் மலம் கழித்தல், தும்மல், இருமல், போன்றவற்றின் மூலம் பரவுகிறது. இந்நோய் தொற்றானது, வயதானவர்கள், சத்துக்குறைபாடு, மனஅழுத்தம், நல்லபழக்கவழக்கம், இல்லாதவர்களுக்கு

விரைவில் நோய் தொற்று ஏற்படும். இந்நோய் தொற்று ஏற்படாமல் தவிர்க்க சுத்தமான குடிநீர், சுகாதாரமான காற்று, கை கழுவுதல், ஆகியவற்றின் மூலம் தடுக்கலாம்.

பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் குறித்த பயிற்சி நவம்பர் 18-ம் தேதி வழங்கப்பட்டது. இப்பயிற்சியில் தினசரி வாழ்க்கையில் நாம் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்புகள் குறித்தும். சாலையில் செல்லும் போதும், வீடுகளில் சமைக்கும்போதும், வாகனங்களில் செல்லும்போதும், கைபேசி, மின்சாரம் உபயோகப்படுத்தும் போதும் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்புகள் குறித்தும் விளக்கப்படங்களுடன் பயிற்சி அளித்தனர். சுற்றுச்சூழலில் கடைபிடிக்க வேண்டிய மக்கும் குப்பை, மக்கா குப்பை பற்றிய பயிச்சியும் அளிக்கப்பட்டது.

சர்க்கரை நோய் பற்றிய பயிற்சி நவம்பர் 28-ம் தேதி வழங்கப்பட்டது. இதில் சர்க்கரை நோய் என்றால் என்ன அதன் அறிகுறிகள் எவ்வாறு கண்டறியலாம் எனவும் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்நோயானது பிறந்த குழந்தைகளுக்கும் நடுத்தர வயதை சார்ந்தவர்களுக்கும், கர்ப காலங்களில் ஏற்படக்கூடிய சர்க்கரை நோய்களின் வகைகள் குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது.

இப்பயிற்ச்சியின் நிறைவில் கலந்து கொண்ட அனைவருக்கும் சர்க்கரை நோய் கண்டறியும் கருவி வழங்கப்பட்டது.

எலும்பு சம்பந்தமான நோய்கள் மற்றும் முதலுதவி மேலாண்மை பற்றிய பயிற்சி பிப்ரவரி 7-ம் தேதி வழங்கப்பட்டது. இப்பயிற்சியில் எலும்பு சம்பந்தமான நோய்கள், எலும்பு பாதிப்பிற்கான அறிகுறிகள், எலும்பை பாதிக்கும் காரணிகள், நோய்க்கான ஆபத்து காரணிகள், பொதுவாக காணப்படும் எலும்பு நோய்கள், கண்டுபிடிக்கும் வழிமுறைகள், சிகிச்சை முறைகள் போன்றவை பற்றியும் செயல் முறை பயிற்சியாகவும், கற்றல் முறை பயிற்சியாகவும் அளிக்கப்பட்டது.

விலங்குகளுக்கு ஏற்படும் நோய் தொற்றுகள் குறித்த விழிப்புணர்வு பயிற்சி மார்ச் 30-ம் தேதி வழங்கப்பட்டது நாம் வீடுகளில் வளர்க்கக்கூடிய விலங்குகளுக்கு நோய் தொற்று ஏற்பட்டால் எவ்வாறு கண்டறியலாம், கவனிக்காமல் விட்டால் அதன் மூலம் மனிதர்களுக்கு எவ்வாறு நோய் தொற்று ஏற்படலாம் என்று பயிற்சி வழங்கப்பட்டது. விலங்குகள் வைத்திருக்கும் இடத்தின் தூய்மை, அதற்குத் தேவையான உணவு வகைகள், போடவேண்டிய ஊசிகள் போன்றவை பற்றியும் கற்றல் முறை மூலமாகவும் செயல் முறை விளக்க மூலமாகவும் அளிக்கப்பட்டது.

# GET TOGETHER



கூட்டமைப்பின் சார்பாக அனைத்து பகுதியில் உள்ள குழு உறுப்பினர்களை ஒருங்கிணைத்து ஒரு நாள் GET TOGETHERக்கான ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் கவுண்டம்பாளையம், சுப்ரமணியம்பாளையம், சோமையனூர், புதுப்பாளையம் ஆகிய பகுதிகளில் இருந்து கூட்டமைப்பின் உறுப்பினர்கள் 100 பேர் கலந்துகொண்டனர். கொடிவேரி, பண்ணாரி, பவானி சாகர் அணை, தென்திருப்பதி ஆகிய இடங்கள் இதற்காக தேர்வு செய்யப்பட்டது.

கூட்டமைப்பின் சார்பாக சாலை ஓரங்களிலும், பவானி ஆற்றங்கரையிலும் 50 மரக்கன்றுகள் நடப்பட்டது.

உறுப்பினர்கள் அனைவரும் கொடிவேரி அருவியில் குளித்து மகிழ்ச்சி அடைந்தனர். பின் பண்ணாரி அம்மன் கோவிலுக்கு சென்று அங்கு அம்மனுக்கு நடந்த திரு கல்யாண உற்சவத்ததை கண்டு களித்தனர் . பின் பவானி சாகர் அணைக்கு சென்று பூங்காக்களில் விளையாடியும், படகு சவாரி செய்தும் மகிழ்ந்தனர். தாங்கள் ஒருவருக்கொருவர் மனம் விட்டு பேசியும் தங்களது நிறை குறைகளை பகிர்ந்து கொண்டனர்.

# மகளிர் தினவிழா





மகளிர் தின விழா அரசு தொழிற்பயிற்சியில் மார்ச் 15, 16 இரண்டு நாட்கள் கொண்டாடப்பட்டது.

முதல் நாள் அங்கு பயிற்சிபெறும் பெண்களுக்கு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டது. இதில் 300 பெண்களும் மாணவிகளும் கலந்து கொண்டனர். அவர்களுக்கு

பலூன் உடைத்தல், இசை நாற்காலி, கயிறு குதித்தல், லக்கி கார்னர், பொட்டோட்டோ ரேஸ் ஆகிய விளையாட்டுகளும், கவிதை போட்டி, கட்டுரைப்போட்டி, ஓவியப் போட்டி, தனிநபர் நடனம் மற்றும் குழு நடனப் போட்டிகளும் நடத்தப்பட்டது. இதில் வயது பாகுபாடின்றி அனைவரும் கலந்து கொண்டனர்.

இரண்டாம் நாள் காலை 10 மணி அளவில் வரவேற்பு நடனத்துடன் மகளிர் தின விழா கொண்டாடப்பட்டது இதில் விமுக்தாவின் ஆலோசகர் திருமதி சீதாலட்சுமி அவர்களும் ஐ.டி.ஐ யின் முதல்வர் திருமதி. ஹெலானஹெம்ளின் அவர்களும் விமுக்தா கூட்டமைப்பின் தலைவர் திருமதி.நாகரத்தினம் அவர்களும் கலந்து கொண்டு விழாவில் சிறப்புரையாற்றினார்கள். அங்கு பயிலும் மாணவிகளுக்கு விமுக்தா வளர்ந்த விதம், பெண்கள் தன்னம்பிக்கை தைரியத்தோடு எப்படி இருக்க வேண்டும். குழுவில் சேர்ந்து சேமிப்பு சேர்ப்பது எப்படி, தங்கள் தொழில்கள் மேம்பாடு அடைய வங்கி கடன்களுக்கு எவ்வாறு அணுக வேண்டும் என்பது பற்றியும் அவர்களிடம் உரையாற்றப்பட்டது இறுதியில் போட்டியில் கலந்துகொண்ட மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

# KKS VISIT




கார்ல் கியூபல் நிறுவனத்தில் இருந்து திரு. RALF TAPEL அவர்கள் தலைமையில் 10 பேர் கொண்ட குழு விமுக்தா குழுக்களின் செயல்பாடுகளையும் தொழில்களையும் களப்பார்வையிட வருகை புரிந்தனர். அவர்கள் கவுண்டம்பாளையம் மற்றும் சுப்ரமணியம் பாளையம் பகுதிகளில் உள்ள சுய தொழில்களை பார்வையிட்டனர், தையல் தொழில் செய்யும் பெண்களை பார்வையிட்டு அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு எவ்வளவு வருமானம் வருகிறது. அவர்கள் எவ்வளவு பேருக்கு தொழில் கற்றுக்கொடுக்கிறார்கள். அதில் உள்ள சிரமங்கள் என்னென்ன என்று கேட்டு தெரிந்து கொண்டனர். தின்பண்டங்கள் தயாரிக்கும் குழுக்களிடம் சென்று அவர்கள் எவ்வாறு தயாரிக்கிறார்கள் அதில் உள்ள விளைவுகள் என்னென்ன பொருட்கள் சேர்க்கிறார்கள் என்றும் அவர்களுக்கு இலாபம் கிடைக்கிறதா என்றும் கேட்டறிந்தனர் கவரிங் நகை தயாரிப்பவர்களை பார்வையிட்டு அவர்களுக்குத் தேவையான தயாரிப்பு பொருட்களை எங்கிருந்து கொள்முதல் செய்கிறார்கள் என்றும் அதில் இலாபம் எவ்வளவு கிடைக்கிறது என்றும் கேட்டு தெரிந்து கொண்டனர்.

Mrs. Kornelia அவர்கள் விமுக்தா கூட்டமைப்பில் உள்ள தொழில்களை கள ஆய்வு செய்வதற்கு வருகை புரிந்திருந்தார். தையல், மண்பாண்டம், காய்கறி வியாபாரம், பெட்டிக்கடை, ஆகிய சுய தொழில்களை பார்வையிட்டனர்.



## Boehringer Team Visit



ஜெர்மனியில் உள்ள போரிங்கர் மருந்து நிறுவனத்திலிருந்து 19 பேர் விமுக்தா கூட்டமைப்பை களப்பார்வையிட வருகை புரிந்திருந்தனர். மண்பாண்ட பொருள்களின் தயாரிப்புகளான அகல்விளக்கு, பானை, அடுப்பு, உருவ பொம்மைகள் எவ்வாறு தயாரிக்கப்பட்டு சந்தைப்படுத்தப்படுகிறது என்பது பற்றி அவர்களிடம் கலந்து கேட்டு அறிந்தனர். பாதணிகள் தயாரிக்கும் குழுவிற்கு சென்று அதன் மூலப் பொருட்கள் எவ்வாறு பெற்று தயாரித்து விற்பனை செய்கின்றனர் என்பதை கேட்டு அறிந்து கொண்டனர்.

## குரு பூஜை விழா

ராமகிருஷ்ணா மிஷின் வித்யாலயத்தில் ஜனவரி 7-ம் தேதி குரு பூஜை விழா நடைபெற்றது. நபார்டு திட்டத்தின் மூலம் விமுக்தா கூட்டமைப்பிற்கு அரங்கு வழங்கப்பட்டது. இதில் விமுக்தா மூலம் செயல்படும் தொழில்களில் மண்பாண்டம், கவரிங் நகைகள், சிறுதானிய வகைகள், ஆகியவை காட்சிக்கு வைக்கப்பட்டது.



சுமார் 5000 க்கு மேற்பட்டோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர் விமுக்தா கூட்டமைப்பின் தொழில் வழிகாட்டல் மற்றும் செயல்பாடுகளை குறித்து பார்வையாள்ர்களுக்கு விளக்கி கூறப்பட்டது.

# காசநோய் விழிப்புணர்வு கூட்டம்



நரசிம்மநாயக்கன் பாளையம் பகுதியில் மார்ச் 24 ம் தேதியன்று காச நோய் விழிப்புணர்வு குறித்த கூட்டம் நடைபெற்றது இதில் 25 பெண்கள் கலந்து கொண்டனர். இதில் பயிற்சியாளராக திருமதி. அமுதா கலந்து கொண்டார். காசநோய் என்பது ஒரு தொற்று நோய் காற்றின் மூலம் பரவும். அதில் தொடர்ந்து இருமல், விடாமல் காய்ச்சல், எடை குறைதல், சளி, போன்ற அறிகுறிகள் பற்றி கூறினார். மேலும் காச நோய் உள்ளவர்கள் தொடர்ந்து 6 மாதகாலம் குறிப்பிட்ட நேரத்தில் மருந்துகள் உட்கொண்டாள் காச நோய் முற்றிலும் குணப்படுத்த முடியும். மருந்துகள் உட்கொண்ட பிறகு சத்தான உணவுகள், கீரைகள், காய்கறிகள், மாமிசம், முட்டை , பால் போன்றவை உண்ண வேண்டும். காலையில் முதன்முதலில் எடுக்கும் சளியை பரிசோதனை செய்தால் காச நோயைக் கண்டறியலாம்.

மேலும் இருமும்போதும் தும்மும்போதும் வாயை துணியால் மூடிக்கொள்ள வேண்டும். தும்மும்போது வெளிவரும் கிருமியால் நோய் தொற்றிக்கொள்ளும். வீட்டையும் சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும். எச்சில் துப்புவதை ஒரு டப்பாவில் போட்டு மூடி வைத்து வெளியே கொட்ட வேண்டும்.

காசநோயை கண்காணித்து தொடர்ந்து அவர்களுக்கு தவறாமல் சரியான நேரத்தில் மருந்துகள் கொடுத்தல் அவர்களுக்கு அரசாங்கம் மூலம் 1000 ரூ ஊக்க தொகையை கொடுப்பதை பற்றி கூறினார். காச நோய் நுரையீரல் மட்டுமின்றி உடலில் உள்ள எல்லா பாகங்களிலும் தொற்றிக்கொள்ளும். வாய்ப்பிருப்பதாக விளக்கமாக எடுத்துக்கூறினார் கூடத்தின் இறுதியில் பெண்கள் கேட்கும் சந்தேகங்களுக்கு விரிவாக விளக்கமளித்தார்

# நிதிசார் கல்வி விழிப்புணர்வு கூட்டம்

என்.எம்.சி.டி பயிற்சிக்கூடத்தில் பிப்ரவரி 27-ம் தேதி நிதிசார் கல்வி விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது.இதில் விமுக்தா கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீ நேருமகா வித்யாலயா (SNMV) கல்லூரி சார்பாக 28 பேர் கலந்து கொண்டனர். இதில் பயிற்சியாளராக திருமதி. வனிதா, திருமதி. பிரேமலதா மற்றும் விமுக்தா கூட்டமைப்பின் நிறுவனர் திரு. A.S. சங்கரநாராயணன், திருமதி. சீதாலட்சுமி ஆகியோர் அறிமுக உரை நிகழ்த்தினர். இதில் நிதி ஆலோசனைகளாக வங்கியில் என்னென்ன கடன் உதவிகள் உள்ளது வட்டி விபரம் அதற்கு தேவையான ஆவணங்கள் பற்றி விரிவாக பயிற்சி அளித்தனர். நிதியை ஒரே இடத்தில் சேமிக்காமல் பல பகுதிகளில் சேமிக்க வேண்டும் என்றும் அதே போல் கடன்களையும் சிறு அலகுகளாக பிரித்து கையாள வேண்டும், நடுத்தர வருமான பிரிவினருக்கான நிதிக்கல்வி இலக்குகளை நிர்ணயித்தல், தகுதிகளை அறிந்து கொள்ளுதல், வரவு செலவுகளை திட்டமிடுதல், நமக்கு பணம் எஜமானாக இருக்ககூடாது பணத்திற்கு நாம் எஜமானர்களாக என்ன செய்யவேண்டும் என்று என விளக்கமாக கூறினார்.





# குழந்தைகளுக்கான விழிப்புணர்வு மற்றும் பயிற்சிகள்



கவுண்டம்பாளையம் பகுதியில் உள்ள ஹவுசிங்யூனிட் நடுநிலை பள்ளி மாணவ மாணவிகளுக்கு ஜனவரி 30-ம் தேதி குழந்தைகளுக்கான உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு வழங்கப்பட்டது. இதில் பயிற்சியாளராக திருமதி.யசோதா அவர்கள் கலந்து கொண்டனர்.

ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு இந்த விழிப்புணர்வு ஒளிவிளக்கப்படங்களுடனும், விளையாட்டுகள் மூலம் அளிக்கப்பட்டது .

இதில் குழந்தைகள் உரிமைகள், நல்லதொடுதல் தீய தொடுதல், பற்றியும் அவர்களின் உரிமைகளான வாழ்வுரிமை, பேச்சுரிமை, எழுத்துரிமை பற்றியும், குழந்தை தொழிலாளர்கள் என்றால் என்ன அவர்களுக்கு ஆபத்து ஏற்பட்டால் அதிலிருந்து அவர்கள் தங்களை எவ்வாறு பாதுகாத்துக் கொள்ளவேண்டும், என்பது பற்றியும் விளக்கமாக கற்றுக் கொடுக்கப்பட்டது.

## குழந்தைகளுக்கான கல்வியறிவு குறித்த விழிப்புணர்வு



குழந்தைகளுக்கான கல்வியறிவு குறித்த விழிப்புணர்வு என்.எம்.சி.டி அலுவலகத்தில் மே 31ஆம் தேதியன்று நடத்தப்பட்டது. இதில் பயிற்சியாளராக ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு. ராஜேந்திரன் அவர்கள் கலந்து கொண்டு குழந்தைகளுக்கு ஆரம்ப கல்வி குறித்து விளக்கமாக கூறினார் திருமதி மகாலட்சுமி அவர்கள் பயிற்சியாளராக கலந்து கொண்டு கல்வியின் அவசியம் குறித்தும் அதன் மூலம் வாழ்க்கைத்தரம் உயர்வது குறித்தும் குறும்படம் மூலம் அழகாகவும் தெளிவாகவும் எடுத்துக் கூறினார். இதில் அனைத்து பகுதியில் இருந்தும் 26 குழந்தைகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

மேலும் குழந்தைகள் கல்வி விழிப்புணர்வில் கற்றுக்கொண்டதை குறித்தும் தங்கள் அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர். இறுதியாக செல்வன் விஜய் அபிஷேக் நன்றி கூறி கூட்டத்தை நிறைவு செய்தார்.

## புகையிலை ஒழிப்பு விழிப்புணர்வு



விமுத்தா அலுவலகத்தில் மே 31ஆம் தேதியன்று விமுக்தா பெண்களுக்கு புகையிலை ஒழிப்பு பற்றிய விழிப்புணர்வு வழங்கப்பட்டது. இதில் திருமதி.பார்வதி அவர்கள் புகையிலையினால் ஏற்படும் பாதிப்பு குறித்தும் தீமைகள் குறித்தும் விளக்கி கூறினார்.

பல நூற்றாண்டு காலமாக புகையிலை பழக்கம் தொடர்ந்து வருகிறது. இதிலுள்ள நிக்கோட்டின் என்ற நச்சு பொருள் சுவாசிக்கும்போது நுரையீரல் வழியே உள்ளே செல்கிறது நுரையீரல் இரத்தத்திற்கு ஆக்சிஜனை சப்பளை செய்கிறது ஆகையால் இந்த புகை இரத்தத்தில் கலக்கிறது. இதன் காரணமாக நுரையீரல் கெட்டுவிடுகிறது. இதய துடிப்பு அதிகமாகிறது புகைபிடிப்பவர்கள் அதிக வேகமாக அதிக தூரம் ஓடமுடியாது. புகை பிடிப்பதன் மூலம் ஆண்கள் ஆண்மையை இழக்கிறார்கள். புகைப்பிடிப்பவர்களுக்கு அல்சர், புற்றுநோய் ஏற்படுகிறது. புகைபிடிப்பவர்களை விட அதை சுவாசிக்கும் பெண்களும் குழந்தைகளும் பாதிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு நிமிடத்திற்கும் 10 லட்சம் சிகரெட் விற்பனையாகிறது . நம்மால் முடிந்தவரை ஒரு நாளைக்கு ஒருவரையாவது புகை பழக்கத்தில் இருந்து விடுபட உதவ வேண்டும் என உறுதி மொழி எடுத்துக்கொண்டனர். இறுதியாக நன்றியுரையுடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

## சுகாதார விழிப்புணர்வுக் கூட்டம்

விமுக்தா அலுவலகத்தில் ஜூன் 27 ம் தேதி சுகாதார விழிப்புணர்வு கூட்டம் நடை பெற்றது இதில் ஸ்ரீ தேவி அவர்கள் தன்சுத்தம் சுகாதாரம் பற்றி விழிப்புணர்வு அளித்தார். கூட்டமைப்பிலிருந்து 28 பேர் கலந்து கொண்டனர். பெண்கள் மாத விடாய் காலத்தில் ஏற்படும் பிரச்சனைகள் பற்றியும் சுத்தமாக இருப்பது பற்றியும் கூறினர்.



சுற்றியுள்ள இடத்தை சுத்தமாக வைத்திருத்தல், தண்ணீர் காய்ச்சி குடித்தல். மழை நீர் தேங்காமல் வைத்தல் இவற்றை மீறுவதால் ஏற்படும் டெங்கு, மலேரியா, டைபாய்டு, போன்ற வியாதிகள் குறித்தும் பேசினர்.

காய்கறிகள், பழங்கள் உண்பதற்கு முன்பு நன்றாக கழுவ வேண்டும். காய்கறிகளை அதிகமாக வேகவிடக்கூடாது. சாப்பிடும் முன்பு கைகளை நன்றாக சோப்பு போட்டு கழுவ வேண்டும். மலம் கழித்த பின்பு கைகளை சோப்பு போட்டு நன்றாக கழுவ வேண்டும். மேலும் சளி காய்ச்சல் என்றால் ஒரு நாள் பார்த்துவிட்டு உடனே அடுத்த நாள் டாக்டரிடம் அழைத்துச்செல்ல வேண்டும் என கூறினர். தினமும் குளித்து சுத்தமான ஆடைகளை உடுத்த வேண்டும். என்று கூறினர் பயிற்சியில் கலந்து கொண்ட பெண்கள் இந்த விழிப்புணர்வு கூட்டம் பயனுள்ளதாக இருந்ததாக கூறினர்.

# டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு



வெள்ளக்கிணறு பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு ஜூலை 24-ம் தேதி அன்று டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வு கொடுக்கப்பட்டது. வெள்ளக்கிணறு பஞ்சாயத்தில் இருந்து சுகாதார மேற்பார்வையாளர் திரு. வெள்ளிங்கிரி கலந்து கொண்டார்.

வீட்டிலும் வெளியிலும் தண்ணீர் தேங்க விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். டயர்கள், சிமெண்ட் தொட்டி, பிளாஸ்டிக் டப்பா, ஆட்டுக்கல், தேங்காய் தொட்டிகள், இவைகளில் மழை நீர் தேங்காமல் இருக்க வேண்டும். வீட்டில் குடிக்கும் நீர் பாத்திரங்களை மூடி வைக்க வேண்டும். எனக்கூறினர்.

மேலும் டெங்கு நோய் பாதிக்கப்பட்டவர்கள் இருந்தால் உடனே சுகாதார நிலையத்திற்கும், பஞ்சாயத்து அலுவலகத்திற்கும் தகவல் கொடுக்க வேண்டும் எனக்கூறினர். டெங்கு காய்ச்சல் வந்தால் நிலவேம்பு கசாயம், பப்பாளி இலை கசாயம் பழங்கள் போன்றவை உட்கொள்ள வேண்டும் எனக்கூறினர். இறுதியாக கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

# பகுதியளவிலான கூட்டமைப்பு பலப்படுத்துவதற்கான பயிற்சி



பகுதியளவிலான கூட்டமைப்பு பலப்படுத்துவதற்கான பயிற்சி நல்லாயன் தொண்டு நிறுவனத்தில் ஆகஸ்ட் 10-ம் தேதி நடை பெற்றது இதில் பயிற்சியாளராக நமது கூட்டமைப்பை சேர்ந்த திருமதி நாகரத்தினம், திருமதி திலகராஜேஸ்வரி ஆகியோர் கலந்து கொண்டு அப்பகுதியில் உள்ள பெண்களுக்கு கூட்டமைப்பை எவ்வாறு பலப்படுத்துவது எனவும், சமூக செயல்பாடுகளில் எவ்வாறு ஆர்வமுடன் பங்கெடுப்பது, வங்கி தொடர்பு கடன்களை வசூல் செய்யும் முறை குழந்தைக்களுக்கான கல்வி உதவித்தொகை, தேவையான பொருட்கள் பெற்று தருவது, மருத்துவ முகாம் நடத்தும் விதம். குழுக்களை பலப்படுத்தக் கையாளும் வழி

முறைகள். ஒவ்வொரு பகுதியிலும் நடைபெற்ற செயல்பாடுகளை கலந்தாய்வு கூட்டத்தில் அனுபவ பகிர்வுகளாக எவ்வாறு கலந்தாய்வுக்கூடத்தில் வெளிப்படுத்தலாம் என்பது குறித்து விவாதித்து சிறப்பாக பயிற்சி அளிக்கப்பட்டது.

## திட்டங்களை தயாரிப்பதற்கான பயிற்சி



பொறுப்பாளர்களுக்கு என்.எம்.சி.டி பயிற்சிகூடத்தில் ஜூன் 2-ம் தேதி திட்டங்களை தயாரிப்பதற்கான பயிற்சியை தர்மபுரி சஸ்டைனபுள் லைஃப் ட்ரஸ்ட்டின் திரு பிரதாபன் அவர்கள் வழங்கினார். இதில் தொண்டு நிறுவனங்களை தர்பன் இணையதளத்தில் எவ்வாறு பதிவு செய்வது என பயிற்சி வழங்கினார்.

மேலும் நமது பகுதியில் என்னென்ன பிரச்சனைகள் உள்ளன ஆராய்ந்து அதற்கு எவ்வாறு திட்டங்களை தயார் செய்யவேண்டும் என கூறினர். திட்டங்களை பெறுவதற்கு முன்பு என்ன என்ன ஆவணங்கள் வேண்டும் என கூறினார். சமூக நலத்துறையில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு உண்டான திட்டங்களை குறித்து அதை எவ்வாறு பெறுவது எனக் கூறினார்.

பொறுப்பாளர்களுக்கு என்.எம்.சி.டி பயிற்சிகூடத்தில் ஜூன் 2-ம் தேதி திட்டங்களை தயாரிப்பதற்கான பயிற்சியை தர்மபுரி சஸ்டைனபுள் லைஃப் ட்ரஸ்ட்டின் திரு பிரதாபன் அவர்கள் வழங்கினார். இதில் தொண்டு நிறுவனங்களை தர்பன் இணையதளத்தில் எவ்வாறு பதிவு செய்வது என பயிற்சி வழங்கினார்.

மேலும் நமது பகுதியில் என்னென்ன பிரச்சனைகள் உள்ளன என ஆராய்ந்து அதற்கு எவ்வாறு திட்டங்களை தயார் செய்யவேண்டும் என கூறினர். திட்டங்களை பெறுவதற்கு முன்பு என்ன என்ன ஆவணங்கள் வேண்டும் சமூக நலத்துறையில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு உண்டான திட்டங்களை குறித்து அதை எவ்வாறு பெறுவது எனக் கூறினார்.

நிறை, குறைகள் சுட்டிக்காட்டுதல் நபர்களை கண்டறிதல், ஆலோசனை கூறுபவர்கள் மற்றும் செயல்படுத்தும் நபர்கள், இதுவரை சாதித்துள்ள சாதனைகள் நிறுவனத்தின் மூலம் எவ்வளவு குடும்பம் வளர்ச்சியடைந்துள்ளது, அவர்களிடம் ஏற்பட்ட மாற்றங்கள். தலைமைத்துவத்தில் கொண்டு வரவேண்டிய மாற்றங்கள் அடுத்த 10 வருடங்களுக்கான திட்டங்களை வகுத்தல் நிறுவனத்திற்கும் பயனாளிகளுக்கும் இடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளை எவ்வாறு சரி செய்வது என பயிற்சி அளிக்கப்பட்டது.

## சமூகத்தணிக்கை



என்.எம்.சி.டி பயிற்சி அரங்கில் நவம்பர் 23ம் தேதி சமூக கணக்கு தணிக்கை பயிற்சி நடைபெற்றது. இதில் அனைத்து CBOக்களும் கலந்து கொண்டனர். திரு. செல்வ தேவன், திரு. ஸ்ரீகுமார், திரு. கீர்த்திவாசன், ஆகியோர் பயிற்சியாளராக கலந்து கொண்டனர். சமூக தணிக்கை எவ்வாறு செய்வது எனவும், அமைப்பின் செயல்பாடுகள், கொள்கைகள், நோக்கம், காரணம், கையாண்ட யுக்திகள், பயனாளிகளின் எதிர்பார்ப்புகள், அறிக்கை தயாரித்தல், முன்னேற்றம், எதிர்கால வாய்ப்புகள், நிதி மேலாண்மை வெளிப்படை தன்மை, நேரடி மறைமுக தொடர்பாளர்கள், செயல்பாடுகளை அளவீடு செய்தல், ஒட்டு மொத்த வெளிப்பாடுகள், தகவல் சேகரித்தல் பிரச்சனைகளை மறு ஆய்வு செய்தல், தரத்தை கண்டறிதல் குறித்து விளக்கமாக பயிற்சி அளித்தனர்.

## நிறுவன வளர்ச்சிக்கான பயிற்சி



என்.எம்.சி.டி பயிற்சிக்கூடத்தில் திரு. ஜெயச்சந்திரன் அவர்கள் ஆகஸ்டு 28, 29, 30 ஆகிய தேதிகளில் நிறுவனத்தை வளர்ச்சி பாதையில் எவ்வாறு கொண்டு செல்லலாம் என்ற பயிற்சி அளித்தார் அதில் உரிமை தேவையின் அடிப்படை நிறை, குறைகள் சுட்டிக்காட்டுதல் நபர்களை கண்டறிதல்,

ஆலோசனை கூறுபவர்கள் மற்றும் செயல்படுத்தும் நபர்கள், இதுவரை சாதித்துள்ள சாதனைகள் நிறுவனத்தின் மூலம் எவ்வளவு குடும்பம் வளர்ச்சியடைந்துள்ளது, அவர்களிடம் ஏற்பட்ட மாற்றங்கள். தலைமைத்துவத்தில் கொண்டு வரவேண்டிய மாற்றங்கள் அடுத்த 10 வருடங்களுக்கான திட்டங்களை வகுத்தல் நிறுவனத்திற்கு பயனாளிகளுக்கும் இடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளை சரி செய்வது என பயிற்சி அளிக்கப்பட்டது.

## சுத்தம் பற்றிய விழிப்புணர்வுக் கூட்டம்



கவுண்டம்பாளையம் பகுதியில் செப்டம்பர்20ஆம் தேதியன்று சுத்தம் பற்றிய விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது. இதில் 32 பேர் கலந்துகொண்டனர். இதன் பயிற்சியாளராக திரு. சரவணன் கலந்து கொண்டார். தினமும் காலையில் குளித்து சுத்தமான ஆடைகளை அணிய வேண்டும் குழந்தைகளுக்கு வாரம் ஒருமுறை நகம் வெட்ட வேண்டும். சாப்பிடும் முன்பும் சாப்பிட்ட பின்பும் கைகளை சுத்தமாக சோப்பு போட்டு கழுவ வேண்டும். சமைக்கும் முன்பு காய்கறிகளை நன்றாக கழுவ வேண்டும். கைகளை சுத்தமாக கழுவ வேண்டும்.

மாதவிடாய் காலத்திலும் குழந்தை பிறந்த பின்பும் பெண்கள் சுத்தமாக இருக்க வேண்டும். குளியறை கழிவறை ஆகியவற்றை சுத்தப்படுத்தி தொற்றுகள் பரவாமலிருக்க கிருமிநாசி னிகளை பயன்படுத்தவேண்டும் மழை நீர் தேங்காமல் பார்க்க வேண்டும் மேலும் மாடி தோட்டம் அமைத்தால் சத்தான காய்கறிகளை உற்பத்தி செய்து சாப்பிடலாம். என கூறினார்.

மக்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள் ஆர்வத்தோடு கேள்விகள் எழுப்பினர்

## தமிழ் நாடு தன்னார்வலர்கள் சுகாதார அமைப்புக் கூட்டம் (TNVHA)



தமிழ்நாடு தன்னார்வ சுகாதார அமைப்பு சார்பாக நவம்பர் 21-ம் தேதி நல்லாயன் தொண்டு நிறுவனத்தில் தாய்

சேய் நல விழிப்புணர்வு குறித்த பயிற்சி வழங்கப்பட்டது. இதில் கோவை மாவட்டத்தில் உள்ள அனைத்து தொண்டு நிறுவனங்களும் கலந்து கொண்டனர்.

கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு, அங்கன்வாடி மற்றும் அரசு சுகாதார நிலையங்களில் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்படுகிறதா என கலந்து ஆலோசிக்கப்பட்டது. ரேஷன் கடைகளில் அயோடின் உப்பு மக்கள் பயன்படுத்துகிறார்களா என் கலந்தாய்வு செய்யப்பட்டது. அனைத்து பகுதிகளிலும் தாய் சேய் நலம் குறித்த தகவல் படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டது.

## பாதுகாப்பு மற்றும் சுற்று சூழல் விழிப்புணர்வு



விமுக்தா அலுவலகத்தில் நவம்பர் 28ம் தேதியன்று சுய பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது. பயிற்சியாளராக திருமதி கார்த்திகேயினி பயிற்சியை நடத்தினர். இதில் 23 பெண்கள் கலந்துகொண்டனர். விபத்துகள் எப்படி ஏற்படுகிறது. மலை ஏறும்போது, ரோட்டில் நடக்கும் போதும் போன் பேசக்கூடாது. இதனால் விபத்து ஏற்படும் பாரம் அதிகம் ஏற்றி செல்லும் வாகனங்கள் சாய்ந்து விபத்து ஏற்படுகிறது. கேஸ் அடுப்பு தவறாக உபயோகம் செய்வது. மழை காலங்களில் மின்சார கம்பி கீழே கிடந்தால் அதை காலால் மிதிப்பது, ரயில் வே கேட் தாண்டும்போதும், பஸ் படிக்கட்டில் நின்று கொண்டு செல்லும்போது விபத்துகள் ஏற்படுகிறது.

இருட்டில் நடக்கும்போது டார்ச் விளக்கு கொண்டு போக வேண்டும். குழந்தைகளுக்கு கேஸ் பற்றிய விழிப்புணர்வு கொடுக்க வேண்டும். காரில் செல்லும்போது பெல்ட் அணிய வேண்டும். மேலும் காய்கறிகளை நன்றாக கழுவி அளவாக சமைக்க வேண்டும். பிளாஸ்டிக் பொருட்கள் உபயோகம் செய்யாமல் துணி பைகளை உபயோகிக்க வேண்டும்.

கேஸ் மூலமாக விபத்து ஏற்பட்டால் உடனே கதவு, ஜன்னல்களை, திறந்து வைக்க வேண்டும். காரில் செல்லும்போது டிரைவர் போன் பேசிக்கொண்டு சென்றால் அவரிடம் தன்மையாக பேசி போன் பேசுவதால் ஏற்பாடு விளைவுகளை கூறவேண்டும்.

மேலும் பல பயனுள்ள தகவல்களை பயிற்சிகளை வழங்கினார்கள்

# சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கான கூட்டம்



என்.எம்.சி.டி அலுவலகத்தில் டிசம்பர் 22 ம் தேதி சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கான கூட்டம் திரு ஜெயச்சந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நிரந்தர பயனாளர்கள், தற்காலிக பயனாளிகள், இடம் பெயரும் பயனாளிகள் தகவல்களை சேகரிக்க வேண்டும் என கூறினர். வருடம் தோறும் நிதி சுழற்சி 5 மடங்கு மேல் இருக்க வேண்டும். இது வரையில் ஏற்பட்ட முன்னேற்றம், வருமான பெருக்கம் வங்கியில் நற்பெயர் பெறுதல், ஆவணப்படுத்தல், அமைப்பின் அவசியம், மக்களின் தேவைகளை பூர்த்தி செய்தல், யுக்திகளை கையாளுதல் தகுதியான பணியாளர்களை அமர்த்துதல், பணிகளை பிரித்து வழங்குதல், கூட்டு முயற்சி, அடிக்கடி மாற்றங்களை உருவாக்குதல், வருமானத்தை பெருக்கி கையாளும் வழி முறைகள், கூட்டமைப்பில் புதுமைகளை புகுத்துதல், என வளர்ச்சி பாதைக்கான ஆலோசனைகளை தொகுத்து வழங்கினர்.

# மருத்துவ முகாம்



வெள்ளக்கிணறு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் S.L.V மருத்துவ மனையுடன் இணைந்து இலவச பொது மருத்துவ முகாம் அக்டோபர் 22ஆம் தேதியன்று நடைபெற்றது. இம்முகாமில் சர்க்கரை நோய், இரத்த கொதிப்பு, வயிற்று வலி குடல்இறக்கம், தைராய்டு, புற்றுநோய், போன்ற நோய்க்கான பொது அறுவை சிகிச்சைக்கான, பரிசோதனைகளும், இலவச ஆலோசனைகளும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. இம்முகாமில் 300-க்கும் அதிகமானோர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

முகாமை வெள்ளக்கிணறு பகுதியின் முன்னாள் தலைவர் திரு.அருள்குமார் அவர்களும் அப்பள்ளியின் பெற்றோர் ஆசிரியக்கழக தலைவர் திரு வே.நா. பழனியப்பன் என்.எம்.சி.டியின் நிதி ஆலோசகர் திரு. கீர்த்திவாசன் கூட்டமைப்பின் பொறுப்பாளர்கள் திருமதி திலகராஜேஸ்வரி, திருமதி.ரம்லத் நிஷா, திருமதி.பேபி ஆகியோர் கலந்து கொண்டு முகாமை சிறப்பித்தனர். விமுக்தா கூட்டமைப்பின் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பாக வழி நடத்தினர்.



இலவச பொதுமருத்துவ முகாம்!

கோவை,அக்.26–
கோவை அருகேயுள்ள வெள்ளக்கிணறு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் இலவச பொது மருத்துவமுகாம் நடைபெற்றது.இம்மருத்துவ முகாம் ... மார் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் வே.நா.பழனியப்பன்,என்.எம்.சி.டி யின் திட்ட அலுவலர் கீர்த்தி வாசன் மற்றும் விமுக்தா கூட்டமைப்பின் அறங்கா

## இலவச கண் பரிசோதனை



கவுண்டம்பாளையம் ஹவுசிங் யூனிட் CMK கட்டுமான அமைப்பு மற்றும் லோட்டஸ் கண் மருத்துவமனையுடன் இணைந்து இலவச கண் பரிசோதனை முகாம் ஜனவரி 26ம் தேதியன்று நடைபெற்றது இத்துடன் துளசி பார்மஸியும் இணைந்து முகாமில் கலந்து கொண்ட அனைவருக்கும் இரத்த அழுத்த, மற்றும் சர்க்கரை பரிசோதனை செய்தனர். இம்முகாமில் 154 பேர் கலந்துகொண்டு பயன் பெற்றனர். அவர்களில் 21 நபர்கள் அறுவை சிகிச்சை செய்வதற்கும் 18 நபர்கள் கண்ணாடி அணிவதற்கும் தேர்வு செய்யப்பட்டனர். மேலும் சர்க்கரை மற்றும் இரத்த அழுத்த குறைபாடு உள்ளவர்களுக்கு கூட்டமைப்பின் பொறுப்பாளர்கள் திருமதி. நாகரத்தினம், திருமதி. ரம்லத் நிஷா, திருமதி. சரஸ்வதி ஆகியோர் விழிப்புணர்வு வழங்கினர்.

# குழந்தைகளுக்கான கல்வி உதவிகள்



ரோஜா கூட்ட தினவிழா இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மே 28ம் தேதி நடைபெற்றது. விமுக்தா கூட்டமைப்பு சார்பாக 60 குழந்தைகள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டது.மாலை விடியலைத் தேடி கலை நிகழ்ச்சி கள் நடைபெற்றது.அதில் விமுக்தா கூட்டமைப்பு சார்பாக 150க்கும் மேற்பட்ட பெண்களும் குழந்தைகளும் கலந்து கொண்டனர்.



கவுண்டம்பாளையம் இராமசாமி திருமண மண்டபத்தில் நிழல்மையம் சார்பாக ஜாய் 2017 கல்வி உபகரணங்கள் வழங்கும் விழா மற்றும் சாலை பாதுகாப்பு மற்றும் தலைகவசம் அணிதல் குறித்த மனித சங்கிலி பேரணி நடைபெற்றது. இதில் விமுக்தா கூட்டமைப்பு சார்பாக 20 பெண்களும் 50 குழந்தைகளும் கலந்து கொண்டனர். குழந்தைகள் ஓவியம் வரைதல் மற்றும் கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்று சான்றிதழ் மற்றும் பரிசுகள் பெற்றனர்.



விமுக்தா கூட்டமைப்பில் வறுமைக் கோட்டிற்க்குகீழ் உள்ள விதவைப் பெண்களின் குழந்தைகளுக்கு செப்டம்பர் 23 ம் தேதி என்.எம்.சி.டி.கே.கே.எஸ் மூலம் கல்வி உதவித் தொகையாக 8 நபர்களுக்கு ரூ. 5,000 வீதம் பெற்றுக் கொடுக்கப்பட்டது. இதன் நிதி உதவியானது அந்த குழந்தைகளின் பள்ளி கட்டணத்திற்கு பேருதவியாக அமைந்தது.

# சட்ட உதவி முகாம்



தொண்டாமுத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் சட்ட உதவி முகாம் நடைபெற்றது. இதில் குடும்ப அட்டை, பட்டா, வாக்காளர் அடையாள அட்டை, போன்றவை எவ்வாறு பெற வேண்டும் குடும்ப நல வழக்குகளுக்கு என்னென்ன ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டும் என்பது குறித்த சட்ட விழிப்புணர்வு வழங்கப்பட்டது. எந்த ஒரு வழக்குகளுக்கும் வழக்கறிஞர்களை தொடர்ப்புக் கொண்டு பயன் பெறலாம் எனவும் மக்கள் நீதி மன்றங்களை எந்த வித அச்சமும் இல்லாமல் நாடி வந்து பயன் பெறலாம் என்பது பற்றியும் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

# களப்பார்வை



பிரபஞ்ச அமைதி சேவாஸ்ரமம் தொண்டு நிறுவனத்தை களபார்வையிட சென்றோம். அங்கு அந்த நிறுவனம் செய்து வரும் பணிகளான குழந்தைகள் இல்லம் முதியோர் இல்லம், சுய தொழிகள் மற்றும் அவர்கள் ஆவணங்கள், ஏடுகள் எவ்வாறு பராமரிக்கிறார்கள் என்று பார்வையிட்டோம். அங்குள்ள குழந்தைகளுக்கு எவ்வாறு பயிற்சி அளிக்கலாம் என்றும் எதிர்காலங்களுக்கு திட்டங்களை வகுத்துக் கொடுக்கலாம். முதியோர்களிடம் எவ்வாறு கலந்துரையாடுவது,பராமரிப்பது என கலந்து ஆலோசித்தோம்.

# YouTube Creators Meet

யுடியூப் தயாரிப்பாளர்களுக்கான கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சிறந்த யுடியூப் தயாரிப்பாளர்கள் பங்கேற்று தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். பெயர், சின்னம் உருவாக்குதல், புதிய வடிவங்களில் படங்களை தயாரிப்பது, அடிக்கடி மாற்றங்களை உருவாக்கி கொண்டே இருத்தல் போன்ற தகவல்களை தெரிவித்தனர்.





# வரவு - செலவு 31.3.2018

| வரவு | தொகை | செலவு | தொகை |
|---|---|---|---|
| ஆரம்ப கையிருப்பு | ரூ. 1,114.00 | பயணச்செலவு | ரூ. 29,363.00 |
| வங்கியிருப்பு | ரூ. 1,91,255.29 | தணிக்கை செலவு | ரூ. 20,000.00 |
| நன்கொடை | ரூ. 64,500.00 | கூட்ட செலவு | ரூ. 7,965.00 |
| சேவை கட்டணம் | ரூ. 5,500.00 | கணிணி பராமரிப்பு | ரூ. 11,030.00 |
| இன்சூரன்ஸ் கமிஷன் | ரூ. 5,963.00 | ஊக்கத்தொகை | ரூ. 69,200.00 |
| வங்கி வட்டி | ரூ. 16,425.00 | குழந்தைகள் திட்டம் | ரூ. 2,300.00 |
| சுழல்நிதி சேவைக்கட்டணம் | ரூ. 3,29,290.00 | இடையீட்டுத்தொகை | ரூ. 5,000.00 |
| தீர்மான புத்தகம் | ரூ. 1,250.00 | அலுவலக செலவு | ரூ. 1,343.00 |
| | | | |
| தொகை திரும்ப பெற்றது | ரூ. 28,13,755.00 | தகவல் தொடர்பு | ரூ. 10,496.00 |
| இன்சூரன்ஸ் திரும்ப பெற்றது | ரூ. 3,466.00 | அச்சகம் மற்றும் எழுது பொருள் | ரூ. 10,476.00 |
| வருமான வரி செலுத்துதல் மீதான வட்டி | ரூ. 54.00 | வாடகை, மின்சாரசெலவு | ரூ. 32,607.00 |
| | | மதிப்பூதியம் | ரூ. 1,03,500.00 |
| | | இணையதளம் புதுப்பித்தல் | ரூ. 3,894.00 |
| | | வங்கி அபராதம் | ரூ. 4,067.00 |

# வரவு - செலவு 31.3.2018

| வரவு | தொகை | செலவு | தொகை |
|---|---|---|---|
| | | **விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் செலவு** | |
| | | விழிப்புணர்வு கூட்ட செலவுகள் | ரூ. 21,362.00 |
| | | மருத்துவ முகாம் செலவுகள் | ரூ. 11,690.00 |
| | | மகளிர் தின நிகழ்ச்சிகள் | ரூ. 9,940.00 |
| | | **பயிற்சி செலவுகள்** | |
| | | BLF பயிற்சி செலவுகள் | ரூ. 850.00 |
| | | குழந்தைகள் ஊக்குவிப்பு திட்டம் | ரூ. 2,750.00 |
| | | குழந்தைகள் பயிற்சி | ரூ. 1,280.00 |
| | | நிர்வாக பயிற்சி | ரூ. 2,800.00 |
| | | SHG பயிற்சி செலவுகள் | ரூ. 2,133.00 |
| | | SHG க்கு கொடுத்த தொகை மற்றும் முன்பணம் | ரூ. 30,10,346.00 |
| | | இறுதி கையிருப்பு | ரூ. 385.00 |
| | | வங்கி இருப்பு | ரூ. 57,795.29 |
| மொத்தம் | ரூ. 34,32,572.29 | மொத்தம் | ரூ. 34,32,572.29 |

# வரவு - செலவு அறிக்கை 31.3.2018

| செலவு | தொகை | வரவு | தொகை |
|---|---|---|---|
| பயணச்செலவு | ரூ. 29,363.00 | நன்கொடை | ரூ. 64,500.00 |
| தணிக்கை செலவு | ரூ. 25,000.00 | சேவை கட்டணம் | ரூ. 5,500.00 |
| கூட்ட செலவு | ரூ. 7,965.00 | இன்சூரன்ஸ் இடையீட்டுத்தொகை | ரூ. 5,963.00 |
| கணிணி பராமரிப்பு | ரூ. 11,030.00 | சுழல்நிதி சேவைக்கட்டணம் | ரூ. 16,425.00 |
| ஊக்கத்தொகை | ரூ. 69,200.00 | வங்கி வட்டி | ரூ. 3,29,290.00 |
| குழந்தைகள் திட்டம் | ரூ. 2,300.00 | தீர்மான புத்தகம் | ரூ. 1,250.00 |
| இடையீட்டுத்தொகை | ரூ. 5,000.00 | வருமான வரி செலுத்துதல் மீதான வட்டி | ரூ. 54.00 |
| அலுவலக செலவு | ரூ. 1,343.00 | கூடுதல் வரவு | ரூ. 3,600.00 |
| தகவல் தொடர்பு | ரூ. 10,496.00 | | |
| அச்சகம் மற்றும் எழுது பொருள் | ரூ. 10,476.00 | | |
| வாடகை, மின்சாரசெலவு | ரூ. 32,607.00 | | |
| மதிப்பூதியம் | ரூ. 1,03,500.00 | | |
| இணையதளம் புதுப்பித்தல் | ரூ. 3,894.00 | | |
| வங்கி அபராதம் | ரூ. 4,067.00 | | |
| **விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் செலவு** | | | |
| விழிப்புணர்வு கூட்ட செலவுகள் | ரூ. 21,362.00 | | |
| மருத்துவ முகாம் செலவுகள் | ரூ. 11,690.00 | | |
| மகளிர் தின நிகழ்ச்சிகள் | ரூ. 9,940.00 | | |
| **பயிற்சி செலவுகள்** | | | |
| BLF பயிற்சி செலவுகள் | ரூ. 850.00 | | |
| குழந்தைகள் ஊக்குவிப்பு திட்டம் | ரூ. 2,750.00 | | |
| குழந்தைகள் பயிற்சி | ரூ. 1,280.00 | | |
| நிர்வாக பயிற்சி | ரூ. 2,800.00 | | |
| SHG பயிற்சி செலவுகள் | ரூ. 2,133.00 | | |
| செலவைக் காட்டிலும் கூடுதல் வரவு | ரூ. 57,536.00 | | |
| மொத்தம் | ரூ. 4,26,582.00 | மொத்தம் | ரூ. 4,26,582.00 |

# இறுதி நிலை இருப்பு 31.3.2018

| பொறுப்புகள் | தொகை | | சொத்துக்கள் | தொகை | |
|---|---|---|---|---|---|
| நன்கொடை | | | நிலையான சொத்து | | |
| கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை | | ரூ. 24,55,300.00 | கணிணி | | ரூ. 1,01,742.78 |
| வரவைக் காட்டிலும் கூடுதல் செலவு | ரூ. 5,36,568.88 | | வாட்டர் பில்டர் | | ரூ. 1,184.00 |
| | ரூ. 57,536.00 | 5,94,104.88 | கேமரா | | ரூ. 14,794.00 |
| இதர தொகை | | ரூ. 1,000.00 | தற்போதைய சொத்து | | |
| தணிக்கை செலவு | | ரூ. 25,000.00 | கையிருப்பு | | ரூ. 385.00 |
| | | | வங்கியிருப்பு | | ரூ. 57,795.29 |
| | | | கடன் நிலுவை | | ரூ. 28,85,850.81 |
| | | | வாடகை முன்தொகை | | ரூ. 5,000.00 |
| | | | வருமான வரி விலக்கு (TDS) | | ரூ. 8,653.00 |
| | | ரூ. 30,75,404.88 | | | ரூ. 30,75,404.88 |

# உறுப்பினர்களுக்கு வழங்கிய சுழல் தொகை விபரம்

| பகுதி | வழங்கிய தொகை | திரும்ப பெற்றது | நிலுவை தொகை |
|---|---|---|---|
| கவுண்டம்பாளையம் | 8,07,853 | 11,38,649 | 8,07,853 |
| நரசிம்மநாயக்கன்பாளையம் | 9,90,965 | 10,76,455 | 9,90,965 |
| கணுவாய் | 3,40,243 | 3,21,628 | 3,02,498 |
| இடையர்பாளையம் | 89,469 | 26,150 | 89,649 |
| வெள்ளக்கிணறு | 4,52,050 | 4,54,215 | 4,52,050 |
| சுப்பிரமணியம்பாளையம் | 3,29,420 | 2,14,762 | 2,42,835 |
| மொத்தம் | 30,10,000 | 32,31,859 | 28,85,850 |

# உறுப்பினர்களுக்கு சுழல்நிதி வழங்கிய காரணங்களும் பயனடைந்த உறுப்பினர்களும்

| காரணங்கள் | பயன் பெற்ற உறுப்பினர்கள் | தொகை ரூபாய் |
|---|---|---|
| வீடு பராமரித்தது | 166 | 4,90,000 |
| கந்து வட்டி கடனில் இருந்து மீட்டது | 286 | 2,15,000 |
| தொழில் தொடங்க விரிவுபடுத்த | 439 | 11,05,000 |
| கல்விச் செலவுக்காக | 148 | 8,20,000 |
| திருமணம் மற்றும் இதர விசேஷங்களுக்கு | 132 | 3,10,000 |
| மருத்துவ செலவுக்கு | 68 | 3,80,000 |
| மொத்தம் | 1412 | 30,10,000 |

# காப்பீடு

| பகுதி | ஆம் ஆத்மி பீமயோஜனா திட்டம் | உறுப்பினர்கள் | காப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|
| கவுண்டம்பாளையம் | ஆம் ஆத்மி பீமயோஜனா திட்டம் | 327 | 32,700 |
| நரசிம்மநாயக்கன்பாளையம் | | 345 | 34,500 |
| கணுவாய் | | 180 | 18,000 |
| இடையர்பாளையம் | | 147 | 14,700 |
| வெள்ளக்கிணறு | | 163 | 16,300 |
| சுப்பிரமணியம்பாளையம் | | 250 | 25,000 |
| | | 1412 | 1,41,200 |

# மாதாந்திர மதிப்பூதியம்

| பெயர் | பணிவகை | மதிப்பூதியம் | பகுதி |
|---|---|---|---|
| வெ.நாகரத்தினம் | முழுநேர பணியாளர் | 4,500 | கவுண்டம்பாளையம்<br>சுப்பிரமணியம்பாளையம் |
| ர.திலகராஜேஸ்வரி | முழுநேர பணியாளர் | 4,500 | கணுவாய்<br>நரசிம்மநாயக்கன்பாளையம் |
| பெ.ரம்லத்நிஷா | முழுநேர பணியாளர் | 3,000 | இடையர்பாளையம்<br>வெள்ளக்கிணறு |

# எங்களோடு பணியில்

விஜயா வங்கி : சாய்பாபா காலனி, நரசிம்மநாயக்கன்பாளையம்

கனரா வங்கி : கவுண்டம்பாளையம், துடியலூர்

ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா : நரசிம்மநாயக்கன்பாளையம்

தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி : கணுவாய்

# உதவிய நல் உள்ளங்கள்

| | | |
|---|---|---|
| திருமதி. சீதாலட்சுமி | திரு. கீர்த்திவாசன் | திரு. அருள்குமார் |
| திரு. பிரதாபன் | திரு. மாத்யூ தாமஸ் | திரு. கர்ணன் காமராஜ் |
| திருமதி. பிரேமலதா | திரு. பழனிச்சாமி | திருமதி. வனிதா |
| திரு. நாகராஜ் | திரு. உதயக்குமார் | |
| திரு. முருகன் | திரு. ஜெயசந்திரன் | |

# உதவிய நிறுவனங்கள்

| | | |
|---|---|---|
| **NMCT** | **KKS** | **KKID** |
| **NABARD** | **LIC** | **SAM** |
| **KKF** | **Kolpin India** | **Good shepherd** |
| **SNMV Collage** | **SELCO, Solar** | **CMK Construction** |
| **Vishwa Yuvak Kendra** | **LMW** | தமிழ்நாடு சமூக நலத்துறை |
| மனித நேயப் பேரவை | ராம கிருஷ்ணா சுய வேலை வாய்ப்பு பயிற்சி மையம் | நிழல் மையம் |
| உதயம் கிளாத் செண்டர் | பெண்கள் தொழில் பயிற்சி நிறுவனம் **(ITI)** | ஸ்ரீ தேவி டெக்ஸ்டைல்ஸ் |
| **i3 Tech** | துளசி பார்மஸி | |



## அபயா குழந்தைகள் இல்லம்

5/39, A, காளப்பநாயக்கன்பாளையம், சோமையாம்பாளையம் (அஞ்சல்)
கோயமுத்தூர் - 641 018. அலைபேசி: 97906 08127, 82202 60405
மின்னஞ்சல்: nmctabhaya2008@gmail.com



## அபயா சதன் முதியோர் இல்லம்

S-21, கார்டன், கோயமுத்தூர் - 18. அலைபேசி: 97906 08127, 82202 60405
மின்னஞ்சல்: abhayasadan2016@gmail.com

# விமுக்தா கூட்டமைப்பு

5/321, VOC நகர், சோமையம்பாளையம் ரோடு
கணுவாய், கோயமுத்தூர் - 641 108.
போன் : 0422 - 2401747
E-mail: vimukthacbe@gmail.com
Web: www.vimuktha.org

www.i3tech.in - 77086 77900